இலங்கையின் உயர்தர கணித விஞ்ஞான

பிரிவிற்கான இணையதளம்

SCIENCE EAGLE

விஞ்ஞானக் கழுகு

# SCIENCE EAGLE

www.scienceeagle.com

- Biology
- C.Maths
- Physics
- Chemistry

\+ more

t.me/ScienceEagle

YouTube/ScienceEagle

/ScienceEagleSL

யாழ். வலயக் கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன்
தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்

**Field Work Centre**

தவணைப் பரீட்சை, மார்ச் - 2016

FWC

# Term Examination, March - 2016

| தரம் :- 12 (2017) | இணைந்த கணிதம் | நேரம் :- 3.00 மணித்தியாலங்கள் |
|---|---|---|

**அறிவுறுத்தல்கள்:**

- பகுதி யு இன் எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக. ஒவ்வொரு வினாவுக்கும் விடைகளைத் தரப்பட்ட இடத்தில் எழுதுக. மேலதிக இடம் தேவைப்படுமெனின், நீர் மேலதிகத் தாள்களைப் பயன்படுத்தலாம்.
- பகுதி டீ இல் உள்ள 7 வினாக்களில் விரும்பிய 5 வினாக்களுக்கு மாத்திரம் விடை எழுதுக.
- ஒதுக்கப்பட்ட நேரம் முடிவடைந்ததும் பகுதி யு ஆனது பகுதி டீ யிற்கு மேலே இருக்கக் கூடியதாக இரு பகுதிகளையும் இணைத்துப் பரீட்சை மண்டப மேற்பார்வையாளரிடம் கையளிக்க.
- வினாத்தாளின் பகுதி டீ யை மாத்திரம் பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே எடுத்துச் செல்வதற்கு அனுமதிக்கப்படும்.

| இணைந்த கணிதம் | | |
|---|---|---|
| பகுதி | வினா எண் | கிடைத்த புள்ளிகள் |
| யு | 1 | |
| | 2 | |
| | 3 | |
| | 4 | |
| | 5 | |
| | 6 | |
| | 7 | |
| | 8 | |
| | 9 | |
| | 10 | |
| டீ | 11 | |
| | 12 | |
| | 13 | |
| | 14 | |
| | 15 | |
| | 16 | |
| | 17 | |
| | மொத்தம் | |
| | | |

| | |
|---|---|
| இணைந்தகணிதம் I | |
| இணைந்தகணிதம் II | |
| மொத்தப்புள்ளிகள் | |
| இறுதிப்புள்ளிகள் | |

## பகுதி – ய

**(1)** $f(x) = \begin{cases} 2 & ; \quad x < -1 \text{ எனின்} \\ x+1 & ; \quad -1 \leq x < 1 \text{ எனின்} \\ -2 & ; \quad x \geq 1 \text{ எனின்} \end{cases}$

$f(x)$ எனும் சார்பின் வரைபை வரைந்து ஆட்சி, வீச்சு என்பவற்றைக் காண்க.

**(2)** $x$ இன் எல்லா மெய்ப் பெறுமானங்களுக்கும் $mx^2 - 4x + 3m + 1 > 0$ ஆகும். வகையில் $m$ இன் தீர்வுத் தொடையைக் காண்க.

**(3)** சமனிலி $\frac{x}{2x-1} \geq 1$ ஐத் திருப்திப்படுத்தும் $x$ இன் மெய்ப் பெறுமானங்களின் தொடையைக் காண்க.

**(4)** $\frac{1}{(x-1)\,(x+2)}$ ஐப் பகுதிப் பின்னங்களாக்குக. இதிலிருந்து $\frac{x\,(x+1)}{(x-1)(x+2)}$ ஐப் பகுதிப் பின்னங்களாக்குக.

**(5)** $a, b\ \in IR^{+} - \{1\}$ இற்கு $log_a a^2 b^3 = \frac{7}{3}$ எனின், $log_b a^3 b^2$ இன் பெறுமானத்தைக் காண்க.

SCIENCE EAGLE

**(6)** ஒரு துணிக்கை $7ms^{-1}$ என்னும் கதியுடன் நிலைக்குத்தாக மேல்நோக்கி எறியப்பட்டு, ஒரு செக்கனின் பின் இரண்டாவது துணிக்கை அதே புள்ளியில் இருந்து அதே கதியுடன் நிலைக்குத்தாக மேல்நோக்கி எறியப்படுகின்றது. இரு துணிக்கைகளும் எங்கே சந்திக்கும் எனக் காண்க. ($g = 10\ ms^{-2}$ என்க.)

**(7)** வலைப்பந்தாட்ட திடலில் O என்ற புள்ளியில் இருந்து ஒரு பந்து $4\sqrt{3},\ 4\ ms^{-1}$ என்ற கிடை, நிலைக்குத்து வேகங்களுடன் நிலைக்குத்தான வலைக்கு செங்குத்தான தளத்தில் வீசப்படுகிறது. O கிடை நிலத்திலிருந்து $30\ cm$ உயரத்திலும் வலை $4\ m$ தூரத்திலும் உள்ளது. O ஊடான கிடை, நிலைக்குத்து அச்சுக்கள் பற்றி பந்தின் எறியற் பாதையின் சமன்பாடு $y = \frac{x}{\sqrt{3}} - \frac{49}{480}x^2$ எனக் காட்டுக.

**(8)** $A, B, C$ என்பவற்றின் தானக்காவிகள் முறையே $60i + 3j,\ 40i - 8j,\ \lambda i - 52j$ ஆகும்.

(i) $A, B, C$ நேர்கோட்டில் இருப்பின், $\lambda$ ஐக் காண்க.

(ii) $AC$ ஐ பிரிக்கும் விகிதம் யாது?

.............................................................................................................................................
.............................................................................................................................................
.............................................................................................................................................
.............................................................................................................................................
..................................................................................
..................................................................................................................................
..................................................................................................................................
..................................................................................................................................
..................................................................................................................................
..................................................................................................................................

**(9)** $P, Q$ என்பன நிகர்த்த சமாந்தர விசைகள் ஆகும். $P$ ஆனது $a$ தூரத்தினூடாக இடப்பெயர்ச்சி அடைந்தால் $P, Q$ என்பவற்றின் விளையுள் $\frac{Pa}{P+Q}$ தூரத்தினூடாக இடப்பெயர்ச்சி அடையும் எனக் காட்டுக.

.............................................................................................................................................
.............................................................................................................................................
.............................................................................................................................................
.............................................................................................................................................
.............................................................................................................................................
.............................................................................................................................................
.............................................................................................................................................
.............................................................................................................................................
.............................................................................................................................................
.............................................................................................................................................
.............................................................................................................................................
.............................................................................................................................................
..................................................................................

**(10)** நிலைத்த புள்ளி O இற்கு இணைக்கப்பட்ட OA என்ற நீளா இழையின் மறு நுனி A இல் 10 N நிறை கட்டப்பட்டுள்ளது. OA ஆனது நிலைக்குத்துடன் $30^0$ கோணத்தை அமைக்குமாறு A இற்கு 5 N இழுவிசை பிரயோகிக்கப்படுகிறது. தொகுதி சமநிலையில் இருப்பின் இவ்விசையின் திசையைக் காண்க.

.............................................................................................................................................
.............................................................................................................................................
.............................................................................................................................................
.............................................................................................................................................
.............................................................................................................................................
.............................................................................................................................................
.............................................................................................................................................
..................................................................................
.............................................................................................................................................
.............................................................................................................................................
..................................................................................
..................................................................................................................................
..................................................................................................................................
..................................................................................................................................
..................................................................................................................................

யாழ். வலயக் கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன்
தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்
**Field Work Centre**
தவணைப் பரீட்சை, மார்ச் - 2016
**Term Examination. March - 2016**

FWC

தரம் :- 12 (2017) | இணைந்த கணிதம் | நேரம் :- 3.00 மணித்தியாலங்கள்

## பகுதி – B

**(11)** (a) $x^2 - px + q = o$ இன் மூலங்கள் $\propto, \beta$ ஆகும்.

i) $\propto^2 + \beta^2$ ii) $\propto^3 + \beta^3$ iii) $\propto^5 + \beta^5$

என்பவற்றை $p, q$ இன் சார்பில் காண்க.

(b) $x^2 + cx + ab = 0,\ x^2 + bx + ca = 0$ எனும் இரு இருபடிச் சமன்பாடுகள் பொது மூலம் ஒன்றைக் கொண்டுள்ளதெனின், $a + b + c = 0$ எனக் காட்டுக.
அத்துடன், அவற்றின் மற்றைய மூலங்கள் $x^2 + ax + bc = 0$ என்பதன் மூலங்களாகும் எனக் காட்டுக.

(c) $f(x) \equiv x^4 - 6x^3 + 14x^2 - 14x + 5$ எனக் கொள்வோம்.
மீதித் தேற்றத்தை மீண்டும் மீண்டும் பயன்படுத்தி $(x-1)^2$ ஆனது $f(x)$ இன் ஒரு காரணியெனக் காட்டுக.

$f(x)$ ஐ வடிவம் $(x-a)^2\,(x^2 + bx + c)$ இல் எடுத்துரைக்க; இங்கு $a, b, c$ என்பன துணியப்பட வேண்டிய மாறிலிகளாகும்.
$x$ இன் மெய்ப் பெறுமானங்களுக்கும் $f(x) \geq 0$ என உய்த்தறிக.

**(12)** (a) பின்வருவனவற்றின் பெறுமானங்ளைக் காண்க.

(i) $\lim\limits_{x \to \propto} \frac{2x^2+3}{3x^2+2}$ (ii) $\lim\limits_{x \to 2} \frac{\sqrt{2x\ \ +5}-3}{X-2}$

(iii) $\lim\limits_{x \to \frac{\pi}{A}} \frac{\sqrt{2}\,COS\,x-1}{\cos\,x - sin\,x}$ (iv) $\lim\limits_{x \to 0} \frac{2\sin x + 3\sin\,2x}{4\sin x + 5\,sin\,3x}$

(b) (i) $x = 2\,(cos\,\theta + \theta sin\,\theta),\ y = 2(sin\theta - \theta cos\,\theta$ எனின் $\theta = \frac{\pi}{4}$ இல் $\frac{dy}{dx}$ ஐக் காண்க.

(ii) $y = x\tan y$ எனின், $\frac{dy}{dx} = \frac{y}{x - x^2 - y^2}$ எனக் காட்டுக.

இதிலிருந்து $(x - x^2 - y^2)\frac{d^2y}{dx^2} = 2\frac{dy}{dx}\left(x + y\frac{dy}{dx}\right)$ எனக் காட்டுக.

**(13)** (a) $cot\,\theta - tan\,\theta = 2\,cot\,2\theta$ எனக்காட்டி,

$tan\;\theta + 2\,tan\,2\theta + 4\,tan\,4\theta = cot\,\theta - 8\,cot\,8\theta$ என்பதை உய்த்தறிக.

(b) $cot \propto cot\,\beta = k$ எனின்

$(k+1)cos\,(\propto + \beta) = (k-1)\cos\,(\propto - \beta)$ எனக் காட்டுக.

இதிலிருந்து $cot\,\theta\,cot\left(\theta - \frac{\pi}{3}\right) = -\frac{1}{3}$ எனும் சமன்பாட்டைத் தீர்க்க.

(c) $tan^{-1}\left(\frac{a}{x}\right) + tan^{-1}\left(\frac{b}{x}\right) = \frac{\pi}{2}$ எனின் $x^2 = ab$

(d) $sin^{-1}\,x,\ sin^{-1}2x$ என்பன நேர்க் கூர்ங்கோணங்களாக இருக்க

$sin^{-1}\,x + 2sin^{-1}2x = \frac{\pi}{2}$ எனின்,

$x = \frac{\sqrt{33}-1}{16}$ எனக் காட்டுக.

**(14)** (a) ஒரு முக்கோணிக்கு வழமையான குறியீட்டுடன் சைன் விதியையும் கோசைன் விதியையும் கூறுக.

ஒரு முக்கோணி $ABC$ இல் $\hat{B} = 3\hat{C}$ எனின்,

$cos\;C = \sqrt{\frac{b+c}{4c}}$ எனவும் $sin\;\frac{A}{2} = \frac{b-c}{2c}$ எனவும் காட்டுக.

(b) முக்கோணி $ABC$ இல் பக்கங்கள் $AB, BC, CA$ இன் நீளங்கள் முறையே $7\;cm, 2\;cm, b\;cm$ ஆகும். $ACB = 30^0$ எனின்,

$b^2 - 2\sqrt{3}\,b - 45 = 0$ எனக் காட்டி, $b$ ஐக் காண்க.

$\sin B = \frac{5\sqrt{3}}{14}$ எனக் காட்டுக.

(c) $A + B + C = \pi$ எனின்,

$sin^2A + sin^2B + sin^2C = 2 + 2\cos A\cos B\cos C$ எனக் காட்டுக.

**(15)** (a) ஒரு கோபுரத்தின் உச்சியில் இருந்து சுயாதீனமாக விழவிடப்படும் ஒரு துணிக்கை $x$ தூரம் செல்லும் கணத்தில் கோபுரத்தின் உச்சியில் இருந்து $y$ தூரம் கீழே உள்ள ஒரு புள்ளியில் இருந்து இன்னொரு துணிக்கை சுயாதீனமாக விழவிடப்படுகின்றது. இரு துணிக்கைகளும் ஒரே நேரத்தில் தரையை அடையும் எனின்,

(i) இரு துணிக்கைகளுக்குமான வேக – நேர வரைபுகளை ஒரே படத்தில் வரைக.

(ii) வேகநேர வரைபை மாத்திரம் பயன்படுத்தி

($\propto$) முதலாவது துணிக்கை $x$ தூரத்தை அடைய எடுக்கும் நேரம் $\sqrt{\frac{2x}{g}}$ எனக் காட்டுக.

($\beta$) முதலாவது துணிக்கை $x$ தூரத்தை அடையும்போது வேகம் $\sqrt{2gx}$ எனக் காட்டுக.

($\gamma$) இரண்டாவது துணிக்கை தரையை அடைய எடுக்கும் நேரம் $\frac{y-x}{\sqrt{2gx}}$ எனக் காட்டுக.

($\delta$) கோபுரத்தின் உயரம் $\frac{(x+y)^2}{4x}$ எனக் காட்டுக.

(b) இரண்டு பையன்கள் கிடைத் தரையின் மீது $a$ இடைத்தூரத்தில் நிற்கின்றனர். ஒருவன் $2h$ உயரத்தில் இருந்து u எனும் வேகத்துடன் ஒரு பந்தை எறிகின்றான். மற்றையவன் அதனை $h$ உயரத்தில் பிடிக்கின்றான். முதலாவது பையன் பந்தைக் கிடையுடன் எறிந்த சாய்வு $\theta$ எனின்,

$ga^2tan^2\theta - 2u^2\, a\, tan\,\theta + ga^2 - 2u^2h = 0$ எனக்காட்டுக.

தரைக்கு மேல் பந்தால் அடையப்பட்ட அதியுயர் உயரத்தைக் காண்க.

**(16)** $A, B$ என்ற புள்ளிகளின் தானக்காவிகள் முறையே $\boldsymbol{a}, \boldsymbol{b}$ ஆகும். $AB$ என்ற நேர்கோட்டில் உள்ள புள்ளி $C$ இன் தானக்காவி $\boldsymbol{c}$ எனின்,

(i) $\boldsymbol{c} = \lambda\boldsymbol{a} + (1-\lambda)\boldsymbol{b}$ எனக் காட்டுக.

(ii) $\boldsymbol{a}+\boldsymbol{b},\ \boldsymbol{c}$ என்பன செங்குத்தானவை எனின்,

$\lambda = \frac{\boldsymbol{a}.\boldsymbol{b}-b^2}{b^2-a^2}$ எனக் காட்டுக.

(iii) $OAB$ இல் $M, L$ என்பன முறையே $AB, OM$ இன் நடுப்புள்ளிகள் $AL, OB$ ஐ $N$ இல் சந்திக்கிறது. $ON = \lambda\, OB,\ LN = \mu\, AL$ ஆக இருப்பின், $\overrightarrow{OA} = \boldsymbol{a}$, $\overrightarrow{OB} = \boldsymbol{b}$ எனக்கொண்டு,

($\propto$) $\overrightarrow{ON}, \overrightarrow{LN}, \overrightarrow{OL}$ என்பவற்றை $\boldsymbol{a}, \boldsymbol{b}$ சார்பாகக் காண்க.

$(\beta)$ $\frac{ON}{NB}$ ஐக் காண்க.

**(17)** i) $P-Q,\ P,\ P+Q$ ஆகிய விசைகள் ஒழுங்காக எடுக்கப்பட்ட சமபக்க முக்கோணியின் பக்கங்களுக்குச் சமாந்தரமாக தாக்குகின்றன. விளையுளின் பருமனைக் காண்க.

ii) $18\frac{1}{2}m$ நீளமும் $300\ kg$ திணிவும் உடைய $AB$ என்ற கோல் $C, D$ என்ற புள்ளிகளிலுள்ள முளைகளில் கிடையாகத் தங்க வைக்கப்பட்டுள்ளது.

$AC\ =\ 6m,\quad AD = 13\frac{1}{2}\ m,\quad AG = 10\ m$

இங்கு புவியீர்ப்பு மையம் $G$ இல் உள்ளது.

$(\propto)$ ஒவ்வொரு முளையிலும் உள்ள தாக்கத்தைக் காண்க.

$(\beta)$ $A$ இலிருந்து $B$ இற்கு நடக்கும்போது கோலைச் சரிக்காது நடக்கக்கூடிய மனிதனின் மிகக்கூடிய நிறையைக் காண்க.

இலங்கையின் உயர்தர கணித விஞ்ஞான
பிரிவிற்கான இணையதளம்

SCIENCE EAGLE
விஞ்ஞானக் கழுகு

Biology
C.Maths
Physics
Chemistry
+ more

SCIENCE EAGLE
www.scienceeagle.com

t.me/ScienceEagle
YouTube/ScienceEagle
/ScienceEagleSL

